இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி


Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 270 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – சித்திரை 28 – வியாழக்கிழமை 11 மே 2023 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 270 : Thiruvalluvar Year - 2054 - Chithirai 28 - Thursday 11 May 2023 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு!



மேட்டூர், மே 11 - காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், அதன் துணை நதிகளான பாலாறு, சின்னாறு, தொப்பையாறு உள்ளிட்ட பகுதிகளிலும் பெய்யும் மழையை பொறுத்து ஒகேனக்கல், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும், சரிவதுமாக உள்ளது. மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 4,906 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று முன்தினம் காலை குறைந்து விநாடிக்கு 3,992 கன அடி வீதம் வந்து கொண்டிருக்கிறது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

நீர் திறப்பை விட வரத்து அதிகமாக உள்ளதால் 102.74 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று முன்தினம் காலை 8 மணி அளவில் 102.88 அடியாக உயர்ந்தது.

## ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்!




காபூல், மே 11 - ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் காலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் காலை மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் பைசாபாத்தில் இருந்து தென்கிழக்கே 116 கிலோ மீட்டர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4.3 ஆக பதிவானது. 120 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. நிலநடுக்கத்தை உணர்ந்ததும் மக்கள் வீட்டை விட்டு வெளியேறினர். நிலநடுக்கத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது.

## முதலீடுகளை ஈர்த்து தெற்காசிய அளவில் தமிழ்நாடு

# சிறந்த மாநிலமாக விளங்கிட உழைத்து வருகிறோம்!

## மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா ஆலை அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மே 11 - “முதலீடுகளை ஈர்த்து தெற்காசிய அளவில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக விளங்கிட உழைத்து வருகிறோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிறுவனம் ரூ.1891 கோடி முதலீட்டில் 2000 பேருக்கு வேலை வாய்ப்பளித்திடும் வகையில் அமைத்திடும் ஆலை பணிக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.05.2023) சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ரூ.1891 கோடி முதலீட்டில், 2000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் காற்றழுத்தக் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் நிறுவப்பட வுள்ள இந்த ஆலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை வருமாறு:-

மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட்டினுடைய புரிந்துணர்வு ஒப்பந்த விழாவிலே பங்கேற்றிருக்கக் கூடிய தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களே,

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஜப்பான் துணைத் தூதர் டாகா மசாயுகி அவர்களே, மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் குழுமத் தலைவர் யாசுமிச்சி தாசுனோகி அவர்களே, மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிர்வாக இயக்குநர் கசுஹிகோ தமுரா அவர்களே, மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிறுவனத்தின் உயர் அலுவலர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கடந்த ஆண்டு நான் அதிகம் கலந்து கொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளின் வரிசையில் எடுத்துப் பார்த்தால், தொழில் துறை நிகழ்ச்சிகள்தான் அதிகமாக இருக்கிறது. அந்த வகையில் இந்த ஆண்டும், தொழில் துறை சார்ந்த நிகழ்ச்சிகளே அதிகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் நான் தொழில் துறை அமைச்சர் அவர்களை யும், அந்தத் துறையினுடைய செயலாளரையும் சந்திக்கும்போதெல்லாம், “இதுவரை போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் நிலை என்ன? புதிய முதலீடுகள் எப்போது வரும்? புதிதாக எத்தனை பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்?” என்று நான் கேட்டுக் கொண்டே இருப்பேன்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (9.05.2023) சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுகா, பெருவயல் கிராமத்தில், மகேந்திரா ஆரிஜின்ஸ்ல், 52 ஏக்கர் நிலப்பரப்பில் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன ஆலை அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே. விஷ்ணு, மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் குழுமத் தலைவர் யாசுமிச்சி தாசுனோகி, மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிர்வாக இயக்குநர் கசுஹிகோ தமுரா, சென்னையில் உள்ள ஜப்பான் துணைத் தூதர் டாகா மசாயுகி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கு அழைப்பு விடுப்பதற்காக வரும் 23ஆம் தேதி ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்குச் செல்ல இருக்கிறேன். இந்த நிலையில், மிக ஸ்மார்ட்டாக, முன்கூட்டியே, ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நிறுவனத்தை வைத்து, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படும் நிகழ்ச்சியை நடத்துகிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் துறை நிகழ்ச்சிகள் என்பவை அந்தத் துறை நிகழ்ச்சிகளாக மட்டும் அமைவது இல்லை, இந்த மாநில வளர்ச்சியினுடைய நிகழ்ச்சிகளாகவும் அமைந்திருக்கின்றன.

### இரட்டிப்பு மகிழ்ச்சி!

மின்னணுவியல் துறையில், உலகளாவிய முன்னணி நிறுவனமான மிட்சுபிஷி எலக்ட்ரிக் நிறுவனத்தின் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் காற்றழுத்தக் கருவிகள் உற்பத்தித் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சியாக மட்டுமில்லாமல், அதற்கான ஆலை அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டி வைத்து இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக அமைந்திருக்கிறது.

### 2 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு!

உங்களது இந்தத் திட்டத்தை, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுகாவில் உள்ள பெருவயல் கிராமத்தில், 1,891 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளீர்கள். உள்ளபடியே மகிழ்ச்சியாக அமைந்திருக்கிறது. இந்த உற்பத்தியில் பெருமளவு ஏற்றுமதி செய்யப்பட உள்ளது. ஏற்றுமதி மேம்பாட்டுக்காக தமிழ்நாடு அரசு பெரு முயற்சிகளை எடுத்து வருகிறது.

கடந்த ஜூலை 2022இல் ‘தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கொள்கை’ என்னால் வெளியிடப்பட்டுள்ளது. அதிலிருந்து 50க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்

## முதலீடுகளை ஈர்த்திட வரும் 23-அன்று ஜப்பான், சிங்கப்பூர் பயணம்!

உள்ளிட்ட பல புதிய தொழில்நுட்ப மையங்களை அமைத்துள்ளன. மேலும் சில நிறுவனங்கள், ஏற்கனவே உள்ள தங்கள் மையங்களை விரிவுபடுத்தியுள்ளன. இதன்மூலம், 1 லட்சத்து 22 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன என்பது மிக மிக கவனிக்கத் தக்கது! நீங்கள் இந்த நிறுவனத்தை அமைப்பதன் மூலமாக பல துணை நிறுவனங்கள் தமிழ்நாட்டுக்கு வர வாய்ப்பு ஏற்படும். இறக்குமதியானது குறையும்.

### பெண்களை பணியமர்த்தும் நிறுவனங்களை வரவேற்கிறோம்!

இந்தத் திட்டத்தில், 60 விழுக்காட்டுக்கு மேல் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்றும், அதற்கான பயிற்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். பெண்களின் நலன் பேணுவதில் அதிக கவனம் செலுத்திவரும் இந்த அரசின் முயற்சிகளுக்கு இது வலு சேர்க்கும். பெண்களை அதிக அளவில் பணியமர்த்திடும் நிறுவனங்களை நாங்கள் வரவேற்று கொண்டிருக்கிறோம்.

### ஜப்பானிய முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலம்!

புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு, அகில இந்திய அளவில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக விளங்குகிறது. அகில இந்திய அளவில் மட்டுமல்ல, தெற்காசிய அளவில், முதலீடுகளை ஈர்த்திட சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கிட வேண்டும் என்ற குறிக்கோளை அடைவதற்காக நாங்கள் அல்லும் பகலும் உழைத்து வருகிறோம். அதிலும் குறிப்பாக ஜப்பானிய முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. எண்ணற்ற ஜப்பானிய நிறுவனங்கள், தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, தங்கள் திட்டங்களை இங்கு நிறுவியுள்ளனர்.

ஜப்பான் இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மை திட்டத்தின்கீழ், இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 ஜப்பானிய தொழில்நுட்ப நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், தமிழ்நாட்டில், அதிக அளவில் ஜப்பானியர்கள் வசித்து வருகின்றனர்.

### தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொள்ள அழைப்பு!

இந்த உறவை மேலும் வலுப்படுத்திடும் வகையில்தான், இந்த மாத இறுதியில், முதலீட்டுக் குழுவுக்கு தலைமை தாங்கி, நான் ஜப்பான் செல்ல இருக்கிறேன். அங்கு முன்னணி தொழில் துறைத் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் சந்தித்து, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று, தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொள்ள வருமாறு நான் அழைப்பு விடுக்க இருக்கிறேன்.

இந்திய அளவில், இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. 2030ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்று ஒரு உயரிய இலக்கை நான் நிர்ணயித்திருக்கிறேன். இந்த இலக்கை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும், நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இந்தப் பாதையில் ஒரு மைல்கல்லாக, மிட்சுபிஷி நிறுவனத்தின் முதலீடு அமைந்திருப்பதில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. இவ்வாறான முதலீடுகள், நாங்கள் அந்த இலக்கை அடைவதற்கு உந்துதல் அளிப்பதோடு, நேர்மறை விளைவுகளை ஏற்படுத்திடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

சாம்சங், ஃபாக்ஸ்கான், பெகட்ரான், வோல்டாஸ் போன்ற மின்னணுவியல் துறை சார்ந்த மிகப் பெரும் உற்பத்தியாளர்கள், தமிழ்நாட்டில் தங்கள் உற்பத்தி அமைப்புகளை நிறுவியுள்ளனர். இவற்றுள் பல நிறுவனங்கள் விரிவாக்கத் திட்டங்களையும் நிறுவியுள்ளன.

### தமிழ்நாட்டை மேலும் வலுப்படுத்திடும் திட்டம்!

இவ்வாறான நேர்மறைச் சூழ்நிலையில், மிட்சுபிஷி நிறுவனத்தின் இந்தத் திட்டம் இங்கு நிறுவப்படவுள்ளது. தமிழ்நாடு அடைந்திருக்கும் பல வெற்றிகளுக்கு மேலும் சிறப்பு சேர்ப்பது மட்டுமின்றி, தமிழ்நாட்டின் மின்னணு உற்பத்தி சூழல் அமைப்பை மேலும் வலுப்படுத்திடும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழ்நாடு அரசின் சார்பாக, உங்கள் திட்டத்தை நான் வெகுவாக வரவேற்கிறேன். உங்கள் வருங்கால திட்டங்களுக்கும், எங்கள் ஆதரவு நிச்சயமாக தொடரும் என்று இந்த உறுதியை தெரிவித்து இந்த வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# மணிப்பூரில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க நடவடிக்கை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மே 11– மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, அங்கு வசிக்கும் தமிழ் மக்கள் உட்பட ஏராளமானவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் சிக்கித் தவிக்கின்றனர்.

முதலமைச்சர் அவர்கள், 05.05.2023 அன்று பொது மற்றும் மறுவாழ்வுத் துறை அலுவலர்களை இதுகுறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியதற்கிணங்க மணிப்பூர் மாநிலத்தில் மருத்துவம் மற்றும் பல்வேறு கல்லூரிகளில் படிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுடன் உடனடியாக தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. மணிப்பூர் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து விவாதித்து அவர்களுக்குத் தேவையான தண்ணீர், உணவு உள்ளிட்ட அனைத்து உதவிகளும் தமிழ்நாடு அரசால், அம்மாநில அரசு மற்றும் மணிப்பூர் தமிழ்ச் சங்க பிரதிநிதிகளுடன் இணைந்து ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளது.

மருத்துவம் பயிலும் மாணவர்கள் அவர்தம் கல்லூரி விடுதிகளில் பாதுகாப்பான நிலையில் உள்ளதாகவும் கல்லூரி தேர்வுகளுக்கு தயாராகி வருவதாலும் தற்சமயம் தமிழ்நாட்டிற்கு திரும்பி வர விருப்பம் இல்லை என தெரிவித்துள்ளார்கள்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டிற்கு திரும்பிவர விருப்பம் தெரிவித்துள்ள விருதுநகர் மாவட்டம் 1, தூத்துக்குடி மாவட்டம் 1, திருவள்ளூர் மாவட்டம் 2, மற்றும் கடலூர் மாவட்டம் 1 என மொத்தம் தமிழ்நாட்டைச் சேர்ந்த 5 மாணவர்களை, தமிழகத்திற்கு அழைத்துவர அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை மூலமாக விமானபயணச் சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாணவர்கள் சென்னை விமான நிலையம் வந்தடையும் அவர்கள் அங்கிருந்து அவர்களது சொந்த ஊர்களுக்குச் சென்று சேர்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் துறையால் செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று மணிப்பூர் மாநிலத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் மோரே தமிழ் மக்களுடனும் தொடர்பு ஏற்படுத்தப் பட்டு அவர்களது பாதுகாப்பிற்கும் தமிழ்நாடு அரசால் மணிப்பூர் அரசு மற்றும் தமிழ்ச் சங்கப் பிரதிநிதிகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மன்னார்குடி தொகுதி எம்.எல்.ஏ.

# டி.ஆர்.பி.இராஜா அமைச்சராகிறார்!

### இன்று பதவியேற்பு! ஆளுநர் மாளிகை அறிவிப்பு!

சென்னை, மே 11– தமிழ்நாடு அரசின் அமைச்சரவையில், மன்னார்குடி தொகுதி எம்.எல்.ஏ. டி.ஆர்.பி. ராஜா, அமைச்சராகப் பதவியேற்கிறார்.

பால்வளத்துறை அமைச்சர் சா.மு.நாசர், அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு ஆளுநரின் முதன்மைச் செயலாளர் விடுத்துள்ள இது தொடர்பான செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மன்னார்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினரான டாக்டர் டி.ஆர்.பி.இராஜா, தமிழ்நாடு அமைச்சரவையில் அமைச்சராக சேர்த்துக் கொள்ளப் பெற வேண்டும் என ஆளுநருக்குப் பரிந்துரைத்திருந்தார். முதல்வரின் இந்தப் பரிந்துரையை ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அதன்படி டி.ஆர்.பி.ராஜா அமைச்சராகப் பதவியேற்கும் நிகழ்ச்சி இன்று (11.5.2023 - வியாழக்கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை - ராஜ்பவன் - தர்பார் ஹாலில் நடைபெறுகிறது.

மேலும் - தமிழ்நாடு அமைச்சரவையிலிருந்து பால்வளத்துறை அமைச்சராக உள்ள எஸ்.எம்.நாசர் விடுவிக்கப் பெற வேண்டுமென்ற முதலமைச்சரின் பரிந்துரையினையும் ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இவ்வாறு ஆளுநர் மாளிகை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.